# October 26, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மோந்தா' புயல் எதிரொலியாக பாம்பன், கடலூர், புதுச்சேரி, நாகப்பட்டினம், காரைக்கால் துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டது.
2. லத்தீன் அமெரிக்காவில் இருந்து தங்கள் நாட்டுக்குள் போதைப் பொருள்களைக் கடத்தும் கும்பல்களுக்கு எதிராக அமெரிக்க டொனால்ட் டிரம்ப் எடுத்துவரும் அதிரடி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, அமெரிக்காவின் மிகப்பெரிய விமானந்தாங்கிக் கப்பல் கரீபியன் கடல் பகுதிக்கு அனுப்பப்படவுள்ளது.
    i. இது குறித்து அமெரிக்க பாதுகாப்புத் துறை தலைமையகமான பென்டகன் பிறப்பித்துள்ள ஆணையில், யுஎஸ்எஸ் ஜெரால்ட் ஆர். ஃபோர்ட் விமானந்தாங்கிக் கப்பலை கரீபியன் கடல் பகுதிக்கு அனுப்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
    ii. ஏற்கெனவே, போதைப் பொருள்களைக் கடத்தி வருவதாகக் கூறி, கரீபியன் கடல் வழியாக வந்துகொண்டிருந்த 10 படகுகளை அமெரிக்கா தாக்கி அழித்தது. இதில் பலர் உயிரிழந்தனர். இத்தகைய தாக்குதல்களால் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கும் அமெரிக்காவும் இடையே பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், கரீபியன் கடல் பகுதியில் சக்திவாய்ந்த விமானந்தாங்கிக் கப்பலை அமெரிக்கா அனுப்பியுள்ளது அந்தப்பதற்றத்தை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.
    iii. கரீபியன் கடலுக்கு விமானந்தாங்கிக் கப்பலை அனுப்பும் அமெரிக்காவின் முடிவை வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடுரோ விமர்சித்துள்ளார்.
3. இந்தியாவில் அறிவியல் துறையில் உயரிய விருதான 'விஞ்ஞான் ரத்னா-2025' விருதுக்கு மறைந்த வானியற்பியல் விஞ்ஞானி ஜெயந்த் நார்லிகர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
    i. பிரபஞ்சத்தின் தோற்றம் தொடர்பான பெரு வெடிப்புக் கோட்பாட்டை மறுத்து, பிரிட்டன் வானியலாளர் ஃபிரெட்ஹாய்லுடன் இணைந்து மேற்கொண்ட ஆய்வுப் பணிகளை அங்கீக ரிக்கும் வகையில் அவருக்கு இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
    ii. பிரபஞ்சம் ஒரே கணத்தில் உருவானது என்று பெரு வெடிப்புக் கோட்பாடு கூறும் நிலையில், முடி வில்லா புதிய பொருள்களின் உருவாக் கத்துடன் பிரபஞ்சம் எப்போதும் நிலைத்திருந்தது என்பதே இவர்களின் கூற்றாகும்.
    iii. விஞ்ஞான் ரத்னா விருது கடந்த 2023-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. முதலாவது விருது, தமிழகத்தைச் சேர்ந்த உயிரி வேதியியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர் கோவிந்தராஜன் பத்மநாபனுக்கு கடந்த 2024-இல் வழங்கப்பட்டது. தற்போது இரண்டாவது விருது, மறைந்த விஞ்ஞானி ஜெயந்த் நார்லிகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
    iv. இதேபோல், பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றிய ஆய்வாளர்களுக்கு விஞ்ஞான் ஸ்ரீ, விஞ்ஞான் யுவ விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. விஞ்ஞான் குழு விருது, ஜம்மு-காஷ்மீ ரில் லாவண்டர் பூக்களின் சாகுபடியை ஊக்குவிக்கும் முன்னெடுப்பை வெற்றிகரமாக மேற்கொண்ட அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சிக் கவுன்சிலின் அரோமா மிஷன் குழுவுக்கு அறிவிக் கப்பட்டுள்ளது.
4. நாட்டில் அதிகரித்துவரும் எண்மக் கைது (டிஜிட் டல் அரஸ்ட்) மோசடி தொடர்பாக தானாக முன்வந்து பதிந்த வழக்கை உச்சநீதிமன்றம் திங்கள்கிழமை (அக். 27) விசாரிக்க உள்ளது.
5. தொலைக்காட்சி சேனல்களின் வருவாயை மேம்படுத்துவதற்காக, டிஆர்பி

(தொலைக்காட்சி மதிப்பீட்டு புள் ளிகள்) நிர்ணய செயல்முறையில் புதிய வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டு வருவதாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

- i. ஊடகத் துறை வேகமாக எண்மமயமாகி வரும் நிலையில், அச்சு ஊடகம், வானொலி மற்றும் தொலைக்காட்சி சேனல்களின் நலன்களைப் பாதுகாக்க பல்வேறு முன்னெடுப்புகளுக்கு அரசு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
- ii. ஊடகத் தொடர்பு மற்றும் ஒழுங்குமுறை செயல்பாடுகளில் ஒருங்கிணைப்பை மேம்படுத்த இந்திய செய்தித் தாள்களின் பதிவாளர் (ஆர்என்ஐ), மத்திய மக்கள் தொடர்பகம் (சிபிசி), பத்திரிகை தகவல் அலுவலகத்துடன் (பிஐபி) இணைந்து மத்திய அரசு செயலாற்றி வருகிறது என்றார் அவர்.
- iii. வெவ்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் பிரபலத்தை அளவிடும் தொலைக்காட்சி மதிப்பீட்டுப் புள்ளிகள் (டிஆர்பி) அடிப்படையில் தொலைக்காட்சி சேனல்கள் விளம்பரங்கள் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

6. தமிழக சட்டப்பேரவையில் கடந்த அக். 15-ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத் திருத்த மசோதா திரும்பப் பெறப்பட்டு மறு ஆய்வு செய்யப்படும் என உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.
   - i. இந்தச் சூழ்நிலையில் தற்போது இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவனங்கள், மாநில தனியார் பல்கலைக் கழகங்களாக உயர விழையும்போதும், புதிதாக தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்குவதற்கும் தற்போதுள்ள சில வழிமுறைகளை எளிமைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துக்காக இந்தச் சட்டமசோதா கொண்டுவரப்பட்டது.
   - ii. உயர் கல்வியைப் பொருத்தவரை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வரும் தமிழகத்தில், தற்போதுள்ள தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டம் 2019, பிரிவு 4-இன்படி, தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு குறைந்தபட்ச நில அளவு 100 ஏக்கர் தொடர்ச்சியான நிலம் தேவைப்படுகிறது. ஆனால், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் அத்தகைய மிகப்பெரிய அளவிலான தொடர்ச்சியான நிலத்தை அடையாளம் காண்பது மிகவும் கடினமாகஉள்ளது.
   - iii. இந்தச் சூழ்நிலையில் பிற அண்டை மாநிலங்களின் தனியார் பல்கலைக்கழகங்களின் சட்டங்களுக்கு இணங்க, நிலத்தின் அளவு குறைக்கப்பட்டால், பல்கலைக்கழகங்களாக மாற விரும்பும் தனியார் கல்வி நிறுவனங்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும் என்ற கருத்துகள் பெறப்பட்டன.
   - iv. இந்தப் புதிய சட்டமசோதாவின்படி குறைந்தபட்ச நில அளவு மாநகராட்சிக்கு 25 ஏக்கர், நகராட்சி அல்லது பேரூராட்சிக்கு 35 ஏக்கர், பிற பகுதிகளுக்கு 50 ஏக்கர் என வரையறுக்கப்பட்டுள்ளது.
7. இந்தியா- அமெரிக்கா இடையேஎரிசக்திவர்த் தகத்தை விரிவுபடுத்துவது தொடர்பாக அந்நாட்டின் எரிசக்தித் துறை துணை அமைச்சர் ஜேம்ஸ் டான்லியுடன் அமெரிக்காவுக்கான இந்திய தூதர் வினய் மோகன் குவாத்ரா ஆலோசனை மேற்கொண்டார்.
8. சர்வதேச பாரா பேட்மின்டன் போட்டியில் பதக்கம் வென்ற தமிழக வீரர்களுக்கு

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துதெரி வித்துள்ளார்.

i. ஆஸ்திரேலியாவில் நடைபெறும் சர்வதேச பாரா பேட்மின்டன் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த வீரர்கள் பதக்கங்களை குவித்துள்ளனர்.

9. பாகிஸ்தான் அரசுக்குச் சொந்தமான பயணிகள் விமானப் போக்குவரத்து நிறுவனத்தின் விமானம் ஐந்து ஆண்டு தடைக்குப் பிறகு முதல் முறையாக பிரிட்டனுக்குச் சென்றது.